## 20.4 ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் வரவு மற்றும் செலவின கணக்குகள் தணிக்கை செய்வதற்கான தணிக்கையாளர்கள் நியமனம்

ஊரக வளர்ச்சி (சி 3) துறை

அரசாணை (நிலை) எண் 265 நாள் : 21.12.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 1722, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள் : 15.101960
2. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரின் நேர்முக கடித எண் டி1/44193/97, நாள் 19.3.97
3. ஊரக வளர்ச்சி இயக்குநரின் கடிதம் நக எண்.44650/08பிசிஏ நாள் 4.12.98

**ஆணை**

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிவிக்கையானது 1999 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 23 ஆம் நாளைய தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீடாக வெளியிடப்படுதல் வேண்டும்.

2) அனைத்து மாவட்ட ஆட்சியர்களும் (சென்னை நீங்கலாக) இவ்வறிக்கையின் நகலினை அந்தந்த மாவட்டத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

( ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்

இணைப்பு

**அறிவிக்கை**

1960 –ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 9 ஆம் நாள் புனித ஜார்ஜ் கோட்டை அரசிதழின் பக்கம் 222 பாகம் II பிரிவு 2–ல் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் அறிவிக்கை எண் –2 II 424/1960 க்கு சுற்றீடற்றிடாகவும், 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப் பிரிவு 193 மற்றும் 242 (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு 4321) உண்டானது. தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பாகம் இரண்டில் காணப்படும் அலுவலர்களை அதற்கெதிராக குறிப்பிடப்படும் ஊராட்சி அமைப்புகளின் வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்வதற்காக நியமிக்கிறார்.

அட்டவணை

| ஊராட்சி அமைப்பின் பெயர் | தணிக்கை அலுவலர் பெயர் |
|---|---|
| (1) கிராம ஊராட்சி | (அ) துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (திட்ட நிதிக் கணக்கு நீங்கலாக)<br>(ஆ) ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (தணிக்கை ) திட்ட நிதிக் கணக்கு நீங்கலாக<br>(இ) உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மற்றும் அவருடைய உதவியாளர்கள் (திட்ட நிதிக் கணக்கு மட்டும்) |
| (2) ஊராட்சி ஒன்றியம் | உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மற்றும் அவருடைய உதவியாளர்கள் |
| (3) மாவட்ட ஊராட்சி | உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர் மற்றும் அவருடைய உதவியாளர்கள் |

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்